## இலகுவழியில் கணிதம் - 3

# அட்சரகணிதம்



giz

## இலகு வழியில் கணிதம் - 03

# அட்சரகணிதம்

கணிதத்துறை
விஞ்ஞான தொழிநுட்ப பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை

**தரம் 10 - 11 இற்கான**
**இலகு வழியில் கணிதம்**

**அட்சரகணிதம்**

தேசிய கல்வி நிறுவகம்
முதலாம் பதிப்பு 2014
இரண்டாம் பதிப்பு 2016

கணிதத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

அச்சு பதிப்பு : பதிப்பகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# முன்னுரை

பாடசாலை முறைமையில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கலைத்திட்டத்தில் கணிதபாடம் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. கணிதம் கட்டாயமான ஒரு பாடமாக இருத்தலும், நாளாந்த வாழ்க்கையில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தேவைப்படும் எண்ணக்கருக்களை அது கொண்டிருத்தலுமே அதற்கான காரணமாகும்.

கணிதம் தொடர்பாக மாணவரின் அடைவு மட்டம் திருப்திப்படத்தக்க நிலைமையில் காணப்பட வில்லை என்பது கடந்த பல ஆண்டுகளின் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளைப் பகுத்தாய்வு செய்ததன் மூலம் தெளிவாகக் காண முடிகின்றது. ஐம்பது சதவீதத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்பாடத்தில் சித்தியடையத் தவறியுள்ளனர் என்பது மேற்படி பகுப்பாய்வின் ஊடாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் கணித பாட அடைவு மட்டம் சற்று உயர்ந்துள்ள போதிலும் அது போதுமானது எனக் கூறிவிட முடியாது.

இப்பாடத்தில் மாணவரது அடைவுமட்டம் இழிவாகக் காணப்படுவதில் பல காரணிகள் பங்களிப்புச் செய்துள்ளன. பாடம் குறித்த தேவையற்ற அச்சம், கணித ஆசிரியர்கள் பற்றாக்குறை, சில கணித ஆசிரியர்களின் பாடவிடய அறிவு போதாமை, கற்றல் - கற்பித்தல் முறைகளில் உள்ள குறைபாடுகள் போன்ற காரணிகளைப் பிரதானமானவையாகக் குறிப்பிடலாம்.

மேற்குறிப்பிட்ட தடைகளை இயன்ற அளவுக்குக் குறைத்து கணித எண்ணக்கருக்கள் தொடர்பாக மாணவரது அறிவையும் திறன்களையும் விருத்தி செய்து கணிதக் கல்வியில் தர மேம்பாட்டை அடைதல் எனும் நோக்கத்தை முன்னிலைப்படுத்தி, இலகு வழியில் கணிதம் எனும் இந்நூற் றொடர் பின்வரும் தலைப்புக்களில் தயாரிக்கப்பட்டுள்ளது.

1. இலகு வழியில் கணிதம் - 1 எண்கள்
2. இலகு வழியில் கணிதம் - 2 அளவீடுகள்
3. இலகு வழியில் கணிதம் - 3 அட்சர கணிதம்
4. இலகு வழியில் கணிதம் - 4 கேத்திர கணிதம்
5. இலகு வழியில் கணிதம் - 5 புள்ளிவிபரவியல்
6. இலகு வழியில் கணிதம் - 6 தொடைகளும் நிகழ்தகவும்

2010 ஆம் ஆண்டின் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட க.பொ.த. சாதாரண தர கணித பாடப் பெறுபேற்றுப் பகுப்பாய்வின் படி நாடளாவிய ரீதியில் தாழ்வான ஆற்றுகைச் சுட்டியைக் காட்டிய கல்வி வலயங்களிலிருந்து பாடசாலைகளைத் தெரிவு செய்து அப்பாடசாலைக் கணித ஆசிரியர்களுக்காக வதிவிடப் பயிற்சி வழங்கி, அவர்கள் தத்தமது பாடசாலைகளுக்குச் சென்று மீண்டும் கற்பித்தலை நடத்தும் விதம் மற்றும் மாணவரது குடும்பச் சூழல் தொடர்பாக நேரடி அனுபவங்கள் பெறப்பட்டதோடு அவ்வனுபவங்கள் இந்நூற்றொடரைத் தயாரிக்கும் பணியின்போது பயன்படுத்தப்பட்டன.

குறைந்த அடைவு மட்டத்தைக் காட்டும் மாணவர்கள் இந்நூல்களைப் பயன்படுத்துவதன் மூலம் தமது அடைவு மட்டத்தை உயர்த்திக் கொள்ளலாம் என்பது எமது எதிர்பார்ப்பாகும். எளிமையான வற்றிலிருந்து படிப்படியாக சிக்கலானவற்றிக்குச் செல்லும் வகையில் செயற்பாடுகளும் பயிற்சி களும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூற்றொடரின் மற்றுமொரு சிறப்பியல்பாகும். அது மாணவரின் கவனத்தை ஈர்த்து வைத்திருப்பதற்கும் ஆர்வத்தை அதிகரிப்பதற்கும் துணையாக அமையும்.

இந்நூல்களைப் பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் பெறும் நடைமுறை அனுபவங்கள் சார்ந்த ஆக்கபூர்வமான பிரேரணைகளை எமக்கு அனுப்பிவையுங்கள். அவை எதிர்காலத்தில் இவ்வாறான பணிகளை மேலும் உயர்வான பெறுபேறுகள் கிடைக்கத்தக்கவகையில் திட்டமிடுவதற்குத் துணையாக அமையும்.

**கே. ரஞ்சித் பத்மசிரி**
பணிப்பாளர்
கணிதத்துறை
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கணிதக் கல்வியை அபிவிருத்தி செய்வதற்காக, தேசிய கல்வி நிறுவகத்தின் கணிதத் துறையினால் காலத்திற்குப் பொருத்தமான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ''இலகு வழியில் கணிதம்'' என்ற பெயரில் தயாரிக்கப்பட்ட இந் நூல்களின் தொகுதியானது அதன் ஒரு பேறாகும்.

குறைவான அடைவு மட்டச் சுட்டியைக் கொண்ட பாடசாலைகளின் ஆசிரியர்களைப் பயிற்றுவித்து, அவர்கள் பணியாற்றும் பாடசாலைகளின் வகுப்பறைகளுக்குச் சென்று, தேசிய கல்வி நிறுவகத்தின் கணிதத் துறையின் அலுவலர்கள் மேற்கொண்ட அவதானிப்புக்களின் அடிப்படையில், அப் பாடசாலைகளின் மாணவர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட இந் நூல்களின் தொகுதியானது தரம் 6 - 11 வகுப்புக்களில் பரிகார வேலைத்திட்டங்களுக்கு வெகுவாக உதவக் கூடியது. இந் நூல் தொகுதியானது இலகுவான முறையில், மாணவர்கள் விரும்பக்கூடியவாறு தயாரிக்கப்பட்டுள்ளமை ஒரு விசேட பண்பாகும். செயற்பாடுகள், விளையாட்டுக்கள், எளிய பயிற்சிகள் கொண்ட ''இலகு வழியில் கணிதம்'' என்ற நூல்களின் தொகுதியானது மாணவர்களின் கற்றற் செய்கைகளையும், ஆசிரியர்களின் கற்பித்தற் செய்கைகளையும் விருத்தி செய்யும் என்பதில் ஐயமில்லை.

இந் நூற்களின் தொகுதியைப் பயன்படுத்தி, கணித பாடத்தில் கற்றல் - கற்பித்தல் - மதிப்பீடு என்ற செயற்தொடரை நிறைவேற்றிக் கொள்ளுமாறு ஆசிரியர்களையும், மாணவர்களையும் வேண்டுகிறேன்.

''இலகு வழியில் கணிதம்'' என்ற நூல்களின் தொகுதியை உங்களுக்கு வழங்குவதற்கு அனுசரணை வழங்கிய GIZ செயற்றிட்டத்திற்கும், ADB செயற்றிட்டத்திற்கும், இப்பணியை நிறைவேற்றிக் கொள்வதற்கு புலமைப் பங்களிப்புக்களைச் செய்த கணிதத்துறை பணிக் குழுவிற்கும், வெளி வளவாளர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

**கலாநிதி ஜயந்தி குணசேகர,**
பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்.

# அறிமுகம்

கல்விப் பொதுத்தராதரப்பத்திர சாதாரண தரப் பரீட்சை 2010 இன் கணிதபாட பெறுபேறு களை அடிப்படையாகக் கொண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட் டுள்ள பாடசாலை ஆற்றுகை சுட்டிகளின்படி, நாட்டின் ஒன்பது மாகாணங்களிலும் குறைவான ஆற்றுகைச் சுட்டியை பெற்றுள்ள பாடசாலைகளைத் தெரிவு செய்து அப்பாடசாலை மாணவரின் அடைவு மட்டம் பற்றி தேசிய கல்வி நிறுவக கணிதத்துறையினால் நேரடியாய் நடாத்தப்பட்ட ஆய்விற்கமைய கணிதபாடத்தில் ஆறு கருப்பொருள்களின் கீழ் தயாரிக்கப்பட்ட ஆறு வினாப் பத்திரங்களை **"மாணவர் மாதிரி"** ஒன்றுக்கு வழங்கி சோதனை நடத்தி பெற்ற புள்ளிகளைப் பாகுப்பாய்வு செய்து மாணவரது குறைபாடுகள், அடைவுமட்டம், மாணவர்கள் அதிகமாக விட்ட தவறுகள், குறைபாடுகளை வெளிக்காட்டிய பாடப்பகுதிகள் அலகு ரீதியாக இனங்கானப்பட்டன. அப்பாடசாலைகளைச் சேர்ந்த கணித ஆசிரியர்களுக்கு இது குறித்து அறிவூட்டம் செய்து அப்பாடசாலைகளின் நிலைமையை மேம்படுத்துதல் தேசிய கல்வி நிறுவகத்தின் எதிர்பார்ப்பாகும்.

இவ்வாறான திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் 152 ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்ட தோடு, அப்பயிற்சியின்போது ஆசிரியர்கள் பெற்றவற்றை மாணவருக்கு வழங்குவதை இலகுபடுத்துவதற்காக **"இலகு வழியில் கணிதம்"** எனும் இச்செயல்நூல் விருத்தி செய்யப்பட்டுள்ளது. ஆசிரியர்களது பாடசாலை பணிகளை மேலும் இலகுபடுத்தி வாராந்த வேலைத்திட்டங்களை மேலும் இலகுவாக நடைமுறைப்படுத்துவதை நோக்காகக் கொண்டே இச்செயல்நூல் திட்டமிடப்பட்டுள்ளது.

**"இலகு வழியில் கணிதம்"** எனும் இச்செயல்நூல், வகுப்பறையில் பயன்படுத்தத்தக்க ஒரு மேலதிக மூலாதாரமாகும். இது பாடநூலுக்கு மேலதிகமாகப் பயன்படுத்தத்தக்க பயன்மிக்க ஒரு நூலாகும். இனங்காணப்பட்ட குறைபாடுகளையும் பாடவிடயங்களையும் உள்ளடக்கி சற்று மெதுவாக கணிதம் கற்கும் மாணவரை இலக்காகக் கொண்டு இச் செயல்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. சந்தித்த பாடத் தலைப்புக்குரியவை அடிப்படையான பாடங்கள் அனைத்தும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளமையால் மாணவர் பாடவிடயங்களை இலகுவாகக் கிரகித்துக்கொள்ள இது துணையாகும். இச்செயல்நூலில் பின்வருவன உள்ளடக்கப்பட்டுள்ளன.

1. முற்சோதனை
2. களிப்பூட்டும் செயற்பாடுகள்
3. இலகுவாக ஈடுபடுத்ததக்க செயற்பாடுகள்
4. எளிமையான வினாக்கள் (தெரிவுசெய்தல், இணைத்தல், பல்தேர்வு, இடைவெளி நிரப்பல்)
5. குறுவிடை வினாக்கள்
6. கட்டமைப்பு வினாக்கள்
7. புதிர்கள் போன்ற ஏனைய கருவிகள்

“கணிதம் கடினமானது” என எண்ணிக்கொண்டிருக்கும் மாணவரது உளநிலையை மாற்றி யமைத்து அது களிப்பூட்டும் ஒரு பாடமாகும் என கணிதத்தை அறிமுகஞ் செய்வதோடு தேவையான சில செயற்பாடுகள் சகல மாணவர்களாலும் தீர்க்கத்தக்க வகையில் எளிமைப்படுத்தி முன்வைக்கப்பட்டுள்ளது.

**“இலகு வழியில் கணிதம்”** செயல்நூல், ஆறு கணிதக் கருப்பொருள்களின் கீழ் ஆறு செயல்நூல்களாக அச்சிடப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| இலகு வழியில் கணிதம் | - | 1 | எண்கள் |
| இலகு வழியில் கணிதம் | - | 2 | அளவீடு |
| இலகு வழியில் கணிதம் | - | 3 | அட்சரகணிதம் |
| இலகு வழியில் கணிதம் | - | 4 | கேத்திரகணிதம் |
| இலகு வழியில் கணிதம் | - | 5 | புள்ளிவிபரவியல் |
| இலகு வழியில் கணிதம் | - | 6 | தொடைகளும் நிகழ்தகவும் |

இச்செயல்நூலில் **“அட்சர கணிதம்”** எனும் கருப்பொருளுக்குரிய பாடவிடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இக்கருப்பொருளின் கீழ் 6 ஆந் தரம் தொடக்கம் 11 ஆந் தரம் வரையில் கற்கும் அடிப்படையான சகல பாட விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. செயற்பாடுகளையும், பயிற்சிகளையும் உள்ளடக்கியுள்ளது. மாணவர் இருக்கும் நிலை களைக் கண்டறிவதற்காக முற்சோதனை தயாரிக்கப்பட்டுள்ளது. செயல்நூலின் இறுதியில் தரப்பட்டுள்ள மதிப்பீட்டின் / பரிசோதனைகளின் மூலம் இச்செயல் நூலைப் பயன்படுத்திய மாணவர்கள் அடைந்துள்ள மட்டத்தை கண்டறியலாம். இச்செயல்நூலைப் பயன்படுத்திய மாணவரது அடைவுமட்டம் மேம்படும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். இச்செயல்நூல் இலங்கையில் கணிதக் கல்விக்கு உறுதுணையாக அமையும் என்பது எங்களது எதிர் பார்ப்பாகும்.

6 - 11 கணித பாடச் செயற்றிட்ட அணி
கணிதத்துறை
விஞ்ஞான தொழிநுட்ப பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**ஆலோசனை :** கலாநிதி. ரீ. ஏ. ஆர். ஜே. குணசேகர
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

திரு. எம். எப். எஸ் பி. ஜயவர்தன
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
விஞ்ஞான தொழினுட்பப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**மேற்பார்வை :** திரு. கே. ஆர். பத்மசிரி
பணிப்பாளர்
கணிதத்துறை
தேசிய கல்வி நிறுவகம்

**திட்டமிடலும் ஒழுங்கமைப்பும் :** திரு. ஜி. எல். கருணாரத்ன,
சிரேஷ்ட கல்வியியலாளர்,
10 - 11 கணிதபாட செயற்றிட்டக் குழுத் தலைவர்.

**பாட இணைப்பாக்கம் :**
**(அட்சர கணிதம்)** திருமதி. எம். என். பீ. பீரிஸ்
விரிவுரையாளர்,
கணிதத்துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**பாடத்திட்டக் குழு :**

| | |
|---|---|
| திரு. கே. ஆர். பத்மசிரி | பணிப்பாளர், கணிதத்துறை<br>தேசிய கல்வி நிறுவகம் |
| திரு. ஜீ. பீ. எச். ஜகத்குமார | சிரேஷ்ட விரிவுரையாளர், கணிதத்துறை<br>தேசிய கல்வி நிறுவகம் |
| திரு. ஜீ. எல். கருணாரத்ன | சிரேஷ்ட விரிவுரையாளர், கணிதத்துறை<br>தேசிய கல்வி நிறுவகம் |
| திருமதி. எம். என். பீ. பீரிஸ் | விரிவுரையாளர், கணிதத்துறை<br>தேசிய கல்வி நிறுவகம் |
| திரு. எஸ். இராஜேந்திரம் | விரிவுரையாளர், கணிதத்துறை<br>தேசிய கல்வி நிறுவகம் |
| திரு. க. சுதேசன் | உதவி விரிவுரையாளர், கணிதத்துறை<br>தேசிய கல்வி நிறுவகம் |
| திரு. ப. விஜய்குமார் | உதவி விரிவுரையாளர், கணிதத்துறை<br>தேசிய கல்வி நிறுவகம் |
| செல்வி. கே. கே. வீ. எஸ். கங்கானம்கே | உதவி விரிவுரையாளர், கணிதத்துறை<br>தேசிய கல்வி நிறுவகம் |

**வெளிவாரி வளவாளர்கள் :**

| | |
|---|---|
| திரு. பீ. டீ. சித்தானந்த பியன்வில | பணிப்பாளர், கணிதத்துறை, கல்வி அமைச்சு |
| திரு. ஜே. எம். எல். லக்ஸ்மன் | ஓய்வு பெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர்<br>சியனே கல்வியியற் கல்லூரி |
| திரு. ரீ. விக்ரம சூரிய | ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் |
| திருமதி. டபிள்யூ. எம். ஜீ. வீரசேகர | ஆசிரிய ஆலோசகர்<br>வத்தேகம கல்வி வலயம் |
| திருமதி. எம். எம். எஸ். கே. மாரசிங்ஹ | ஆசிரிய ஆலோசகர்<br>வத்தேகம கல்வி வலயம் |
| திரு. ஜயம்பத் லொகுமுதலி | ஆசிரியர்,<br>மே.மா. ஜய. ஜனாதிபதி வித்தியாலயம்<br>மகரகம |
| திருமதி. ஜி.எச்.எஸ். றஞ்சித் டி சில்வா | ஆசிரியர்<br>தர்மபால ம. வி., பன்னிப்பிட்டிய |
| திரு. வ. ஐங்கரன் | ஆசிரியர், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி<br>யாழ்ப்பாணம் |
| திரு. அ.செ. சத்தியசீலன் | ஆசிரியர்,<br>வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயம்<br>மட்டக்களப்பு |
| திரு. எம். இராஜேந்திரன் | பிரதி அதிபர், விவேகானந்தக் கல்லூரி,<br>கொழும்பு 12 |
| **மொழிச் செம்மையாக்கம்** | திரு. என். ரகுநாதன்<br>ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் |
| **கணணி வடிவமைப்பு** | திருநாவுக்கரசன் கிரிநிவாசன்,<br>ஆசிரிய ஆலோசகர், கல்முனை |
| **அட்டைப் பட வடிவமைப்பு** | திரு. ஈ. எல். ஏ. கே. லியனகே |

# உள்ளடக்கம்

**தலைப்பு** **பக்கம்**


1.0 குறியீடுகளும் அட்சர கணித கோவைகளும் ............................................ 01

2.0 அட்சர கணித கோவைகளும் காரணிகளும் ............................................ 08

3.0 அட்சர கணித கோவைகளின் பொது மடங்குகளுள் சிறியது ................. 16

4.0 அட்சர கணித பின்னங்கள் ...................................................................... 19

5.0 எளிய சமன்பாடுகள் ................................................................................... 29

6.0 இருபடிச் சமன்பாடுகள் ............................................................................ 37

7.0 ஒருங்கமை சமன்பாடுகள் ........................................................................ 43

8.0 தெக்காட்டித்தளமும் நேர்க்கோட்டு வரைபுகளும் ..................................... 51

9.0 இருபடி சார்பின் வரைபுகள் ...................................................................... 67

10.0 சமனிலிகள் ................................................................................................. 79

11.0 தாயங்கள் ..................................................................................................... 93

12.0 விடைகள் ..................................................................................................... 99

# 1.0 குறியீடுகளும் அட்சரகணித கோவைகளும்

## முற்சோதனை 1

(ஒவ்வொரு பாடத்தின் ஆரம்பத்திலும் முற்சோதனையை நடாத்தவும்.)

1. கமலனிடம் $x$ புத்தகங்கள் உள்ளன. அமலனிடம் கமலனை விட 5 புத்தகங்கள் அதிகமாக உள்ளன. அமலனிடம் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கைக்கான கோவையினைத் தருக.

2. சுருக்குக. $3m-4n+m+8n$

3. அடைப்பு நீக்கிச் சுருக்குக. $5(x+3)$

4. அடைப்பு நீக்கிச் சுருக்குக. $(3x+2)-(x+5)$

5. அடைப்பு நீக்கிச் சுருக்குக. $(p+1)(p-2)$

6. செவ்வகமொன்றின் நீளமானது அதன் அகலத்தின் மும்மடங்கிலும் 2 குறைவு. செவ்வகத்தின் அகலம் $x$ எனின்

   i. செவ்வகத்தின் நீளத்திற்கான கோவையினைத் தருக.

   ii. செவ்வகத்தின் சுற்றளவுக்கான கோவையொன்றை $x$ சார்பில் தருக?

   iii. செவ்வகத்தின் பரப்பளவிற்கான கோவையொன்றினை $x$ சார்பில் தருக.

**பயிற்சி 1.**

(1) கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளுக்குப் பொருத்தமான கணிதக் குறியீடுகளை எழுதுக.

i. பூக்கொத்து ஒன்றிலுள்ள பூக்களின் எண்ணிக்கை.

ii. வயற்பாத்தியொன்றிலுள்ள நெற்குருவிகளின் எண்ணிக்கை

iii. இளநீர் குலையொன்றிலுள்ள இளநீர்களின் எண்ணிக்கை

iv. பாடசாலையிலுள்ள மாணவர் மேசைகளின் எண்ணிக்கை

v. ஒரு மணித்தியாலத்தில் குறித்த சந்தியொன்றைக் கடந்து செல்லும் வாகனங்களின் எண்ணிக்கை

vi. ஆல மரமொன்றில் தொங்கிக்கொண்டிருக்கும் வௌவால்களின் எண்ணிக்கை

vii. இன்று பாடசாலைக்கு சமூகமளித்த மாணவர்களின் எண்ணிக்கை

viii. பாடசாலையில் 8 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை

| |
|---|
| பால்மாவின் விலை ரூபா 50 அதிகரித்தது. அதிகரிப்பின் முன் அதன் விலை ரூபா $x$ எனின் பால்மாவின் புதிய விலை எவ்வளவு?<br>விடை - ரூபா $(x+50)$ |

(2) கீழே தப்பட்டுள்ள விபரங்களுக்கேற்ப சரியான விடையைத் தெரிக.

1. கமலனின் வயது $x$ வருடங்களாகும். அமலன் கமலனைவிட 5 வருடங்கள் மூத்தவன். அமலனின் வயதினைத் தருவது?

(i) $5x$ வருடங்கள் (ii) $5-x$ வருடங்கள்
(iii) $x+5$ வருடங்கள் (iv) $x-5$ வருடங்கள்

2. என்னுடைய உயரம் $xcm$ ஆகும். எனது தம்பி என்னைவிட $10cm$ குறைவானவன். தம்பியின் உயரத்தை $cm$ இல் தருவது?

(i) $x+10$ (ii) $\frac{x}{10}$ (iii) $10x$ (iv) $x-10$

3. கடந்த வருடம் வீட்டுத்தோட்டத்தில் கிடைத்த வருமானம் ரூபா $m$ ஆகும். இவ்வருட வருமானமானது கடந்த வருட வருமானத்தைப் போன்று 5 மடங்காகும் என எதிப்பார்க்கப்படுகின்றது இவ்வருடம் எதிர்ப்பார்க்கப்படும் வருமானத்தினைத் தருவது?

(i) $m+5$ (ii) $m^5$ (iii) $5m$ (iv) $\frac{m}{5}$

4. மரமொன்றிலிருந்த கிளிகளின் எண்ணிக்கை $x$ ஆகும். அவற்றிவிருந்து 4 கிளிகள் பறந்து சென்றுவிட்டால் எஞ்சியுள்ள கிளிகளின் எண்ணிக்கையினை தருவது?

(i) $x+4$ (ii) $4-x$ ( iii) $x-4$ (iv) $\frac{x}{4}$

5. என்னிடம் இருந்த முத்திரைகளின் எண்ணிக்கை $u$ ஆகும். அவற்றை எனது மூன்று தங்கைமார்களுக்கு சமனாக பகிர்ந்து கொடுத்தபோது ஒருவருக்கு கிடைத்த முத்திரைகளின் எண்ணிக்கையைத் தருவது?

(i) $u+3$ (ii) $u-3$ (iii) $3u$ (iv) $\frac{u}{3}$

(3) ஒத்த உறுப்புக்களை கூட்டங்களாக வேறுப்படுத்துக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| $2x$ | 10 | $11x$ | $3y$ | 8 | 3 |
| $4y$ | $5x$ | $15x$ | $6y$ | 14 | $x$ |




(4) பொருத்தமான விடையைத் தெரிந்து இணைக்க.

| | (i) | | | (ii) | |
|---|---|---|---|---|---|
| | $3m+2m$ | $8m$ | | $3m-m$ | $10x$ |
| | $m+3m$ | $11m$ | | $5m-2m$ | $5m$ |
| | $4m+7m$ | $4m$ | | $12x-x$ | $2m$ |
| | $10m+2m$ | $5m$ | | $20m-15m$ | $3m$ |
| | $5m+3m$ | $12m$ | | $20x-10x$ | $11x$ |

(5) பெருக்குக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | $5\times2$ | 10 | (vi) | $5x\times6$ | ........ |
| (ii) | $2\times x$ | $2x$ | (vii) | $x\times x$ | $x^2$ |
| (iii) | $3\times m$ | ........ | (viii) | $2x\times x$ | ........ |
| (iv) | $5\times2m$ | $10m$ | (ix) | $5a\times3a$ | $15a^2$ |
| (v) | $10\times4x$ | ........ | (x) | $7m\times2m$ | ........ |

(6) அட்டவணையை நிரப்புக.

| $\oplus$ | 2 | 3 | 7 | 10 | 15 |
|---|---|---|---|---|---|
| 4 | $4+2$ | $4+3$ | | | |
| 10 | | | | | |
| $x$ | | | $x+7$ | | |
| $2x$ | | | | | $2x+15$ |
| $5x$ | | $5x+3$ | | | |

(7) அட்டணையை நிரப்புக.

| $\otimes$ | 2 | 4 | 10 | -3 | $n$ |
|---|---|---|---|---|---|
| 5 | 10 | | | -15 | |
| $x$ | | | | | $n\,x$ |
| $m$ | | | $10\,m$ | | |
| $2\,m$ | | | | | |
| $3\,a$ | | $12\,a$ | | | |

(8) கோவைகளைக் கூட்டுக.

(i) $\begin{array}{r} 2x+3y \\ +\ \underline{4x+5y} \\ \underline{\underline{.....+8y}} \end{array}$ (ii) $\begin{array}{r} 3m+7n \\ +\ \underline{5m+2n} \\ \underline{\underline{8m+.....}} \end{array}$ (iii) $\begin{array}{r} 7a-6b \\ +\ \underline{2a-3b} \\ \underline{\underline{.....-9b}} \end{array}$ (iv) $\begin{array}{r} x-4y \\ +\ \underline{3x-5y} \\ .\ \underline{\underline{4x-.....}} \end{array}$

(9) கோவைகளைக் கூட்டுக.

(i) $3x+9x+2y+3y$

$=\underline{\underline{12x+..........}}$

(ii) $4x+6y+2x+8y$

$=\underline{\underline{......................}}$

(iii) $6m-2m+8n-5n$

$=\underline{\underline{4m+...........}}$

(iv) $9a+7c-3a-5c$

$=\underline{\underline{....................}}$

(10). முதலாவது கோவையிலிருந்து இரண்டாவது கோவையை கழிக்க

(i) $2x+3;\ x+2$   (ii) $3y+4;\ y+3$   (iii) $5a+2,\ 3a+4$

(iv) $b+4; 2b+3$

(11) அட்டவணைகளின் வெற்றிடங்களை நிரப்புக.

(i)

| $x$ | $x+5$ |
|---|---|
| 10 | 15 |
| 15 | 20 |
| 20 | 25 |
| 25 | ☐ |

(ii)

| $n$ | $n - 10$ |
|---|---|
| 20 | 10 |
| 30 | ☐ |
| 40 | ☐ |
| 50 | ☐ |

(iii)

| $m$ | $3m$ |
|---|---|
| 5 | 15 |
| 6 | 18 |
| 8 | ☐ |
| 10 | ☐ |

(iv)

| $x$ | $\frac{x}{10}$ |
|---|---|
| 20 | 2 |
| 30 | ☐ |
| 50 | ☐ |
| 70 | ☐ |

(v)

| $x$ | $\frac{x}{5}$ |
|---|---|
| 20 | 4 |
| 30 | ☐ |
| 40 | ☐ |
| 60 | ☐ |

(12) அட்டவணையில் உள்ள வெற்றுக்கூடுகளுக்குப் பொருத்தமான கோவையை எழுதுக.

(i)

| $x$ | ☐ |
|---|---|
| 6 | 10 |
| 8 | 12 |
| 10 | 14 |
| 12 | 16 |

(ii)

| $x$ | ☐ |
|---|---|
| 15 | 10 |
| 20 | 15 |
| 25 | 20 |
| 30 | 25 |

(iii)

| $m$ | ☐ |
|---|---|
| 12 | 6 |
| 14 | 7 |
| 16 | 8 |
| 20 | 10 |

(iv)

| $t$ | ☐ |
|---|---|
| 4 | 20 |
| 10 | 50 |
| 12 | 60 |
| 15 | 75 |

(13) பெருக்குவதன் மூலம் கட்டங்களை பூரணப்படுத்துக. இடைவெளிகளை நிரப்புக.

i.

| $\otimes$ | $m+3$ | $n+5$ |
|---|---|---|
| 2 | $2m+6$ | ☐ + ☐ |

$2(m+3) = \ldots\ldots + \ldots\ldots$

$2(n+5) = \ldots\ldots + \ldots\ldots$

ii.

| $\otimes$ | $p-4$ | $x-10$ |
|---|---|---|
| 5 | $5p-$ ☐ | ☐ − ☐ |

$5(p-4) = \ldots\ldots - \ldots\ldots$

$5(x-10) = \ldots\ldots - \ldots\ldots$

(14) பெருக்குவதன் மூலம் பெறப்படும் விடையை தொடர்புபடுத்துக.

1.

| | | |
|---|---|---|
| i. | $4(x+7)$ | $5x-35$ |
| ii. | $5(x-7)$ | $12u-60$ |
| iii. | $10(m+4)$ | $4x+28$ |
| iv. | $12(u-5)$ | $10m+40$ |

2.

| | | |
|---|---|---|
| i. | $2(10+x)$ | $10x+30$ |
| ii. | $3(5-x)$ | $20+2x$ |
| iii. | $4(x-8)$ | $15-3x$ |
| iv. | $5(2x+6)$ | $4x-32$ |

(15) தரப்பட்டுள்ள அளவுகளுக்கேற்ப உருவின் பகுதிகளின் பரப்பளவுகளைக் காண்க.

(a)




b)



(16) i.

| | $n$ | $4$ |
|---|---|---|
| $n$ | $n^2$ | ................ |
| $3$ | ........ | ................ |

தரப்பட்டுள்ள அளவுகளுக்கேற்ப உருவிலுள்ள கட்டங்களின் பரப்பளவுகளைப் கண்டு குறிக்க.

ii. உருவின் முழு நீளம் எவ்வளவு? $n+4$

அகலம் எவ்வளவு? ..........

iii. முழு உருவின் பரப்பளவானது நீளமும் அகலமும் பெருக்குவதால் பெறப்படுவதாகும்

$(n+4)(..............)$

iv. முழு உருவின் பரப்பளவானது சிறுகட்டங்கள் நான்கின் கூட்டுத்தொகையாக

$n^2+\square+\square+\square$

(17) இருபடிக் கோவைகளைப் பெருக்கி விடையைப் பெறுக.

i) $(c+5)(c+10)$
$=c(c+10)+5(c+10)$
$=c^2+10c+.........+.........$
$=c^2+.........+.........$

ii) $(x+2)(x+5)$
$=x(x+5)+2(........+........)$
$=x^2+........+........+........$
$=........+........+........$

iii) $(x+10)(x-5)$
$=x(x-5)+10(...........)$
$=..................................$
$=..................................$

iv) $(x+7)(x-10)$
$=x(..........)+7(...........)$
$=..................................$
$=..................................$

v) $(x-4)(x-5)$
$=x(x-5)-4(...........)$
$=..................................$
$=..................................$

# 2.0 அட்சர கணிதக்கோவைகளும் காரணிகளும்

**முற்சோதனை 2**

1. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கோவைகளிலும் பொதுக் காரணிகளை வேறாக்குக.
   (i) $2x+4$ (ii) $y^2-3y$ (iii) $5p+5$

2. காரணிப்படுத்துக. $pq-pr+3q-3r$

3. காரணிப்படுத்துக. $a^2-b^2$

4. $x^2+3x+2$ இன் காரணியைக் காண்பதற்காகத் தரப்பட்டுள்ள இடைவெளிகளைப் பூரணப்படுத்துக.

$$x^2+3x+2$$
$$x^2+2x+.....+2$$
$$x(....+.....)+1(x+.....)$$
$$(x+2)(....+.....)$$

5. காரணிப்படுத்துக. $6x^2-5x+1$

6. காரணி பற்றிய அறிவைப் பயன்படுத்தி $9^2-4^2$ இன் பெறுமானத்தைக் காண்க.

சுற்றுலா ஒன்றிற்காக இரு பேருந்து வண்டிகள் ஒழுங்கமைக்கப்பட்டது. முதலாவது பேருந்தில் $x$ ஆண் பயணிகளும் $y$ பெண் பயணிகளும் ஏறினர். இரண்டாவதில் $x$ ஆண்களும் $y$ பெண்களும் ஏறினர். இவ்விரு பஸ்வண்டியிலும் உள்ள பயணிகளின் எண்ணிக்கை பற்றி பாலன் விமலன் எனும் இரு மாணவர்கள் கூறியவை கீழுள்ளது.

பாலன் : இரு பஸ்வண்டியிலும் இருந்த ஆண்களின் எண்ணிக்கை $2x$ உம் பெண்களின் எண்ணிக்கை $2y$ உம் ஆகும். ஆகவே பயணிகளின் எண்ணிக்கை $2x+2y$ என கூறினார்

விமலன்: பஸ் ஒன்றிலுள்ள பிரயாணிகளின் எண்ணிக்கை $x+y$ ஆகும். எனவே இருபஸ்களிலும் உள்ளவர்களின் எண்ணிக்கை இருமடங்காகும் எனவே $2(x+y)$ ஆகும்.

ஆசிரியர்: இவ்விரு விடைகளும் சரியென ஏற்றுக்கொண்டு அளித்த விளக்கம் கீழுள்ளது.

$2x+2y$

$2(x+y)$

( 2 - பொதுக்காரணியாகும் )

**பயிற்சி - 2**

(1) சரியான கூற்றிற்கு சரியெனின் (✓ ) குறியீட்டையும் பிழையெனின் (X) குறியீட்டையும் உரிய இடைவெளியில் இடுக.

| | | | |
|---|---|---|---|
| $2p+2$ | $\rightarrow$ | $2(p+1)$ | .......... |
| $4p+4$ | $\rightarrow$ | $4(p+4)$ | ......... |
| $5m+15$ | $\rightarrow$ | $5(m+1)$ | ......... |
| $10n-20$ | $\rightarrow$ | $10(n-2)$ | ......... |
| $u^2-5u$ | $\rightarrow$ | $u(u-5)$ | ......... |
| $15t-20$ | $\rightarrow$ | $15(t-5)$ | ......... |
| $30t+20$ | $\rightarrow$ | $5(6t+4)$ | ......... |
| $10y+10$ | $\rightarrow$ | $10(y+1)$ | ......... |

(2) பொதுக்காரணியை வெளியே எடுப்பதன் மூலம் இடைவெளிகளை நிரப்புக.

i. $25a^2+25$
$25(a^2+1)$

ii. $15n+n^2$
$n(15+.......)$

iii. $20m+15$
$5(4m+.......)$

iv. $2u^2-u$
$u(2u-.........)$

v. $3a^2+a$
$........(3a+1)$

vi. $12p-6p^2$
$6p(.........-........)$

vii. $13c^2+13$
$.......(.......+1)$

viii. $25t^2+50$
$25(........+........)$

ix. $30x^2+20$
$.........(3x^2+.........)$

x. $2a^2-2a$
$.........(........-........)$

xi. $7x^2-14x$
$.........(..................)$

(3) தரப்பட்டுள்ள இரு கோவைகளுக்கும் பொதுக்காரணி இருப்பின் பொதுக்காரணியை எழுதுக. இல்லையெனில் இல்லை எனக் குறிப்பிடுக.

i. $m(a+1)$, $4(a+1)$ → $(a+1)$

ii. $n(x+3)$, $5(x+3)$ → (............)

iii. $u(5+u)$, $4(5+u)$ → (............)

iv. $a(a+7)$, $12(a+10)$ → (............)

v. $t(t+12)$, $5(t+12)$ → (............)

vi. $2x(x+6)$, $7(x+6)$ → (............)

(4) இடைவெளிகளை நிரப்பி தரப்பட்டுள்ள கோவைகளின் காரணியைப் பெறுக.

i. $3m + 3n + am + an$
= 3(........ +$n$) +......($m$+........ )
= (....... +......) ( 3+.......)

ii. $mx+my+nx+ny$
$=m(x+y)+n(........+........)$
$=(........+........)(........+........)$

iii. $x^2-10x+7x-70$
$=x(........-........)+......(........-........)$
$=(........-........)(x+........)$

iv. $n^2 + 4n + 15n + 60$
= $n$(........ +4 ) +15(....... +4 )
= (....... +......) ( $n$+.......)

v. $x^2 - 7x + 8x - 56$
= $x$(........ - .......)+........(....... - .......)
= (....... - .......)(....... +.......)

## இரு நிறைவர்க்கங்களின் வித்தியாசத்தின் காரணிகள்




பக்கமொன்றின் நீளம் $a$ ஆன சதுர காட்போட் துண்டொன்றிலிருந்து பக்க நீளம் $b$ ஆன சதுரப்பகுதியொன்று உருவில் காட்டப்பட்டுள்ளவாறு வெட்டி அகற்றப்பட்டுள்ளது.

குற்றுக் கோட்டுப் பகுதியினூடாக வெட்டப்பட்ட பகுதியை உருவில் காட்டியுள்ள இடத்தில் ஒட்டி செவ்வகமொன்றைப் பெற்றுக்கொள்ளவும்.




- ♦ பக்கமொன்றின் நீளம் $a$ ஆன காட்போட் துண்டின் பரப்பளவு $= a^2$
- ♦ பக்கமொன்றின் நீளம் $b$ ஆன காட்போட் துண்டின் பரப்பளவு $= b^2$
- ♦ $b$ ஐ நீளமாக கொண்ட பகுதி அகற்றப்பட்ட பின் எஞ்சிய பகுதியின் பரப்பளவு $= a^2 - b^2$
- ♦ புதிய செவ்வகத்தின் நீளம் $= (a+b)$
- ♦ புதிய செவ்வகத்தின் அகலம் $= (a-b)$
- ♦ புதிய செவ்வகத்தின் பரப்பளவு $= (a+b)(a-b)$

$$a^2 - b^2 = (a+b)(a-b)$$

(5) இருநிறைவர்க்க வித்தியாசங்களின் காரணிகளைப் பெற்று இடைவெளிகளை நிரப்புக.

1. $a^2 - b^2 = (a-b)(a+b)$
2. $x^2 - y^2 = (x-y)(.........+.........)$
3. $m^2 - n^2 = (.........-.........)(m+n)$
4. $p^2 - q^2 = (........-........)(........+........)$
5. $c^2 - d^2 = (..................)(..................)$
6. $8^2 - 3^2 = (..................)(..................)$

(6) வர்க்கவித்தியாசமுறை மூலம் பெறுமானம் காண்க?

(1) $10^2 - 3^2 = (10-3)(10+3)$
$= 7\times 13$
$= 91$

(2) $6^2 - 2^2 = (6-2)(6+2)$
$= ..........\times..........$
$= ...............$

(3) $15^2 - 10^2 = (15- .........)(15+10)$
$= ..........\times\ 25$
$= ...............$

(4) $12^2 - 7^2 = (12- .......)(12+ .......)$
$= ..........\times\ ...........$
$= ...............$

(5) $9^2 - 4^2 = (...........)(...........)$
$= .........\ \times\ ..........$
$= .............$

(7) இடைவெளிகளை நிரப்புவதன் மூலம் காரணிகளைக் காண்க.

(1) $a^2 - (b+3)^2$
$= \{.......-(b+3)\}\{.......+(b+3)\}$
$= (a-b-3)(a+b+3)$

(2) $9a^2 - 100$
$= 3^2 a^2 - 10^2$
$= (3a)^2 - 10^2$
$= (3a- ........)(3a+ .........)$

(3) $49 - (x+y)^2$
$= .........-(x+y)^2$
$= \{.......-(x+y)\}\{.......+(x+y)\}$
$= (7-x-y)(......+x+y)$

(4) $4a^2 - (2a-b)^2$
$= 2^2 a^2 - (2a-b)^2$
$= \{2a-(2a-b)\}\{2a+(..............)\}$
$= (2a-2a+b)(2a+.........-........)$
$= b(...........-b)$

(5) $25x^2 - 9y^2$
$= (.............)-(.............)$
$= (.............)(.............)$

இருபடி மூவுறுப்பிக் கோவையை காரணிப்படுத்துவோம்

**உதாரணம் : 1**

$x^2+5x+6$ என்பதைக் காரணிப்படுத்துக.

$x^2+5x+6$ $\quad (x^2)\times(+6)=+6x^2$ (வர்க்க உறுப்பையும் மாறிலியையும் பெருக்குக)

$(+1x)(+6x)$

$(+2x)(+3x)$

$(-1x)(-6x)$

$(-2x)(-3x)$

மேலே பெருக்கிப் பெற்றதன் எல்லாக் காரணிகளையும் எழுதுக. (குறியீடுகளுடன்)

$5x=2x+3x$ (பெருக்கம் $6x^2$ ஆகவும், கூட்டுத்தொகை $+5x$ (நடுஉறுப்பு) ஆகவும் உள்ள காரணிச் சோடியைத் தெரிந்து நடுஉறுப்பை அவற்றின் கூட்டுத்தொகையாக எழுதுக.

$x^2+2x+3x+6$

$=x(x+2)+3(x+2)$ பொதுக்காரணியைக் காண்க.

$=(x+2)(x+3)$

$\therefore x^2+5x+6=(x+2)(x+3)$

**உதாரணம் : 2**

$x^2-7x+6$ என்பதைக் காரணிப்படுத்துக.

$x^2-7x+6$ $\quad (x^2)\times(+6)=6x^2$ (வர்க்க உறுப்பையும் மாறிலியையும் பெருக்குக)

$(1x)(6x)$

$(2x)(3x)$

$(-1x)(-6x)$

$(-2x)(-3x)$

கூட்டுத்தொகை $-7x$ ஆகவுள்ள காரணிச் சோடி $-1x,\ -6x$ ஆகும்.

$\therefore x^2-7x+6=x^2-x-6x+6$

$=x(x-1)-6(x-1)$

$=(x-1)(x-6)$

(8) கீழே தரப்பட்டுள்ள இருபடிக் கோவைகளின் காரணிகளைக் காண்க.

(1) $x^2 + 10x + 24$

(2) $x^2 - 100$

(3) $x^2 - 4x$

(4) $x^2 - 10x - 24$

(5) $x^2 + x - 132$

(6) $x^2 + 2x - 8$

(7) $x^2 + 7x + 6$

(8) $x^2 + 20x + 99$

(9) $x^2 + 18x + 77$

(10) $x^2 + x - 6$

(11) $x^2 - 5x$

(12) $x^2 - 12x + 11$

(13) $x^2 - 17x + 60$

(14) $x^2 - 8x - 20$

(15) $x^2 - 15x + 56$

(9) கீழே தரப்பட்டுள்ள இருபடிக் கோவைகளின் காரணிகளைக் காண்க.

(1) $8x^2 + 28x + 24$

(2) $2x^2 + 13x + 15$

(3) $-8x^2 + 16x - 6$

(4) $9x^2 + 9x + 2$

(5) $6x^2 - 5x + 1$

(6) $-15x^2 + 29x + 2$

(7) $-5x^2 + 11x - 2$

(8) $30x^2 + x - 1$

(9) $10x^2 + 21x + 9$

(10) $-4x^2 - 3x + 1$

# 3.0 அட்சரகணித கோவைகளின் பொது மடங்குகளுள் சிறியது

**முற்சோதனை 3**

சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.

1. 2, 3 இன் பொது மடங்குகளுள் சிறியதைக் காண்க.

   (i) 6 (ii) 9 (iii) 12 (iv) 18

2. 6, 9 இன் பொது மடங்குகளுள் சிறியதைக் காண்க.

   (i) 6 (ii) 3 (iii) 54 (iv) 18

3. $x,\ y$ இன் பொது மடங்குகளுள் சிறியதைக் காண்க.

   (i) $x$ (ii) $y$ (iii) $xy$ (iv) $x^2y^2$

4. $5,\ 2p$ இன் பொது மடங்குகளுள் சிறியதைக் காண்க.

   (i) 10 (ii) $10p$ (iii) $2p$ (iv) $7p$

5. $2,\ 3x,\ y$ இன் பொது மடங்குகளுள் சிறியதைக் காண்க.

   (i) $6x$ (ii) $6xy$ (iii) $xy$ (iv) 6

6. $2a,\ 3b,\ 4a^2$ இன் பொது மடங்குகளுள் சிறியதைக் காண்க.

   (i) $24a^2b$ (ii) $24a^3b$ (iii) $12a^3b$ (iv) $12a^2b$

7. $6p,\ 9q,\ q^2$ இன் பொது மடங்குகளுள் சிறியதைக் காண்க.

   (i) $6q^2p$ (ii) $6pq$ (iii) $18pq^2$ (iv) $18p^2q$

### 3. அட்சரக்கணித கோவைகளின் பொது மடங்குகளுள் சிறியது

| |
|---|
| தரப்பட்ட அட்சரகணித உறுப்புக்களால் வகுக்கக்கூடிய மிக சிறிய அட்சரக்கணித உறுப்பு, தரப்பட்ட அட்சரக்கணித உறுப்புக்களின் பொது மடங்குகளுள் சிறியது எனப்படும். |

**உதாரணம் 1**

$5a,\ 2ab^2$ இன் பொது மடங்குகளுள் சிறியதைக் காண்போம்

$5a = 5\times a$

$2ab^2 = 2\times a\times b\times b$

$5, 2$ இன் பொது மடங்குகளுள் சிறியது $10$ ஆகும்.

$a$ இன் உயர் வலு $a$ ஆகும்.

$b$ இன் உயர் வலு $b^2$ ஆகும்.

$5a,\ 2ab^2$ இன் பொது மடங்குகளுள் சிறியது $= 10ab^2$

**உதாரணம் 2**

$4xy^2,\ 6y,\ 3x^2$ இன் பொது மடங்குகளுள் சிறியதைக் காண்போம்

$4xy^2 = 2\times 2\times x\times y\times y$

$6y = 2\times 3\times y$

$3x^2 = 3\times x\times x$

$4, 6, 3$ இன் பொது மடங்குகளுள் சிறியது $2\times 2\times 3 = 12$

$x$ இன் உயர் வலு $x^2$ ஆகும்.

$y$ இன் உயர் வலு $y^2$ ஆகும்.

$4xy^2,\ 6y,\ 3x^2$ இன் பொது மடங்குகளுள் சிறியது $= 12x^2y^2$

**உதாரணம் 3**

$4,\ 2x,\ 3y^2$ இன் பொது மடங்குகளுள் சிறியதைக் காண்போம்

$4 = 2\times 2$

$2x = 2\times x$

$3y^2 = 3\times y\times y$

$4, 2, 3$ இன் பொது மடங்குகளுள் சிறியது $2\times 2\times 3 = 12$

$x$ இன் உயர் வலு $x$ ஆகும்.

$y$ இன் உயர் வலு $y^2$ ஆகும்.

$4,\ 2x,\ 3y^2$ இன் பொது மடங்குகளுள் சிறியது $= 12xy^2$

பயிற்சி 3

1. A கூட்டினுள் தரப்பட்டுள்ள அட்சரக்கணித உறுப்புகளின் பொது மடங்குகளின் சிறியதை B கூட்டில் தெரிந்து இணைக்க

| A | B |
|---|---|
| $l, m$ | $12x^2y^2$ |
| $xy, yz$ | $21bc^2$ |
| $2x, 3y$ | $xyz$ |
| $2a, 6ab, 5a$ | $30ab$ |
| $3xy^2, 4y$ | $10a^2b^2$ |
| $5a^2b^2, 10a$ | $lm$ |
| $7bc^2, 21b$ | $6xy$ |

2. அடைப்புனுள் பொருத்தமான விடையைத் தெரிந்து இடைவெளியை நிரப்புக.

| | mlrufffz ip c WgGfs; | nghJ klqFfSs; rpwpaJ | tpilfs; |
|---|---|---|---|
| (i) | $3a,\ 2b^2,\ ab$ | ........................ | $(6ab,\ 6a^2b,\ 6ab^2)$ |
| (ii) | $3xy,\ 4y,\ 5x$ | ........................ | $(20xy,\ 60xy,\ 12xy)$ |
| (iii) | $6a^2b,\ 5ab^2,\ ab$ | ........................ | $(6a^2b^2,\ 30ab^2,\ 30a^2b^2,\ 30a^2b)$ |
| (iv) | $5p^2,\ 8q^2,\ 4r^2$ | ........................ | $(40p^2q^2r^2,\ 40pqr^2,\ 40p^2qr,\ 40pq^2r)$ |
| (v) | $6,\ 3x,\ 8b$ | ........................ | $(48bx,\ 24bx,\ 144bx,\ 36bx)$ |

3. சரியான விடையின் கீழ் கோடிடுக

(i) $3p, 8$ இன் பொது மடங்குகளுள் சிறியது

(a) 24 (b) $24p$ (c) $12p$ (d) $16p$

(ii) $5x^2, 7y^2, xy$ இன் பொது மடங்குகளுள் சிறியது

(a) $35xy$ (b) $35x^2y$ (c) $35x^2y^2$ (d) $35xy^2$

(iii) $5a, 2ab, 3a^2$ இன் பொது மடங்குகளுள் சிறியது

(a) $30ab$ (b) $30a^2b^2$ (c) $30a^2b$ (d) $30ab^2$

(iv) $6xy, 9x^2, 2y^2$ இன் பொது மடங்குகளுள் சிறியது

(a) $8x^2y^2$ (b) $54x^2y^2$ (c) $18x^2y^2$ (d) $18xy$

4. கீழே தரப்பட்டுள்ள அட்சரக்கணித உறுப்புகளின் பொது மடங்குகளுள் சிறியதைக் காண்க

(i) $ab, 4a^2b, 8a^2b^2$  (ii) $4, 6a^2b, 8b$

(iii) $5ab^2, 10a^2b, 2ab^2$  (iv) $p^2q, pq, pq^2$

(v) $12, 8k, 4k^2$

# 4.0 அட்சரகணித பின்னங்கள்

## முற்சோதனை 4

1. கீழே தரப்பட்டுள்ள பின்னங்களுள் அட்சரகணித பின்னங்களை தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக

(i) $\frac{3}{7}$ (ii) $\frac{a}{7}$ (iii) $\frac{b}{a+2}$ (iv) $\frac{1}{4}$ (v) $\frac{2}{p}$ (vi) $\frac{x+3}{x}$

2. பகுதி $x$ ஆகவும் தொகுதி $y$ ஆகவும் கொண்ட அட்சரக்கணித பின்னத்தை எழுதுக

..........................

3. $\frac{2x}{5}+\frac{x}{5}$ இதனை கூட்டும் போது கிடைக்கும் விடையை தெரிவு செய்க

(i) $\frac{3x}{10}$ (ii) $\frac{3x}{25}$ (iii) $\frac{3x}{5}$ (iv) $\frac{6x}{25}$

4. $\frac{3p}{r}-\frac{p}{r}$ இதனை கழிக்கும் போது கிடைக்கும் விடையை தெரிவு செய்க

(i) $\frac{3p^2}{r^2}$ (ii) $\frac{2p}{r}$ (iii) $2p$ (iv) $\frac{2p}{r^2}$

5. $\frac{2x}{3}\times\frac{7}{y}$ ஐ பெருக்கும் போது கிடைக்கும் விடையை தெரிவு செய்க

(i) $\frac{14x}{3y}$ (ii) $\frac{3y}{14}$ (iii) $\frac{21x}{y}$ (iv) $\frac{14x}{3}$

6. $\frac{3a}{4y}$ இன் நிகர்மாறு யாது?

(i) $\frac{4}{3}$ (ii) $\frac{4a}{3y}$ (iii) $\frac{4y}{3a}$ (iv) $\frac{3}{4}$

7. கூட்டுக: $\frac{1}{a}+\frac{1}{2a}$

8. கழிக்குக: $\frac{y}{3}-\frac{y}{5}$

9. பெருக்குக: $\frac{5x}{2}\times\frac{x}{10}$

10. வகுக்க: $\frac{16a}{9}\div\frac{4ab}{15}$

## 4.1 அட்சரகணித பின்னங்கள்

பகுதியில் அல்லது தொகுதியில் அல்லது இரண்டிலும் அட்சரகணித உறுப்புக்களை அல்லது அட்சரகணிதக் கோவைகளை கொண்ட பின்னங்கள் அட்சரகணித பின்னங்கள் எனப்படும்.

**பயிற்சி 4.1**

1. வட்டத்தினுள் காணப்படும் அட்சரகணித பின்னங்களை தெரிவு செய்து அவற்றை செவ்வகத்தினுள் எழுதுக.

$\frac{a}{x}$ $\quad \frac{a}{5}$ $\quad \frac{3}{a}$ $\quad \frac{1}{7+1}$ $\quad \frac{1}{2}$ $\quad \frac{x-1}{x+1}$ $\quad \frac{1}{x+1}$ $\quad \frac{x+5}{3}$ $\quad \frac{3}{8}$ $\quad \frac{a+b}{b}$ $\quad \Rightarrow$

பின்னங்களை போன்று அட்சரகணித பின்னங்களுக்கும் சமவலுப்பின்னங்களை எழுத முடியும்.

**உதாரணம் : 1**

$$\frac{1}{3}=\frac{2}{6}=\frac{3}{9}\ ,\ \frac{x}{3}=\frac{2x}{6}=\frac{3x}{9}\ ,\ \frac{2}{x}=\frac{4}{2x}=\frac{6}{3x}\ ,\ \frac{4p^2}{8q}=\frac{p^2}{2q}$$

2. 1 வது செவ்வகத்தினுள் காணப்படும் அட்சரகணித பின்னங்களுக்கு பொருத்தமான சமவலுவான அட்சரகணித பின்னங்களை 2 வது செவ்வகத்தினுள் இருந்து தெரிவு செய்து அவற்றை தொடர்புபடுத்துக

| 1 | 2 |
|---|---|
| $\frac{a}{2}$ | $\frac{6}{15y}$ |
| $\frac{2}{5y}$ | $\frac{5}{10a}$ |
| $\frac{1}{2a}$ | $\frac{2a}{4}$ |
| $\frac{2}{3x}$ | $\frac{6}{9x}$ |

## 4.2 முழு எண்களை பகுதியாக கொண்ட பின்னங்கள்

| |
|---|
| பின்னங்களை கூட்டும் போதும் கழிக்கும் போதும் பகுதியெண்களை சமப்படுத்துவது போன்று , அட்சரக்கணித பின்னங்களை கூட்டும் போதும் கழிக்கும் போதும் பகுதி சமப்படுத்தப்பட வேண்டும். |

**உதாரணம் : 1**

1. $\frac{1}{5}+\frac{2}{5}$
   $=\frac{1+2}{5}$
   $=\frac{3}{5}$

2. $\frac{1}{10}+\frac{1}{10}$
   $=\frac{2}{10}+\frac{1}{10}$
   $=\frac{2+1}{10}$
   $=\frac{3}{10}$

3. $\frac{1}{2}+\frac{1}{3}$
   $=\frac{3}{6}+\frac{2}{6}$
   $=\frac{3+2}{6}$
   $=\frac{5}{6}$

4. $\frac{1}{6}+\frac{2}{9}$
   $=\frac{3}{18}+\frac{4}{18}$
   $=\frac{3+4}{18}$
   $=\frac{7}{18}$

5. $\frac{a}{5}+\frac{a}{5}$
   $=\frac{a+a}{5}$
   $=\frac{2a}{5}$

6. $\frac{x}{5}+\frac{x}{10}$
   $=\frac{2x}{10}+\frac{x}{10}$
   $=\frac{2x+x}{10}$
   $=\frac{3x}{10}$

7. $\frac{b}{2}+\frac{b}{3}$
   $=\frac{3b}{6}+\frac{2b}{6}$
   $=\frac{3b+2b}{6}$
   $=\frac{5b}{6}$

8. $\frac{y}{6}+\frac{2y}{9}$
   $=\frac{3y}{18}+\frac{4y}{18}$
   $=\frac{3y+4y}{18}$
   $=\frac{7y}{18}$

**பயிற்சி 4.2**

படிமுறைகளை பூரணப்படுத்துவதன் மூலம் கட்டத்துக்கு பொருத்தமான பெறுமானங்களை எழுதுக.

1. $\frac{x}{5}+\frac{2x}{5}$
   $=\frac{\square+2x}{5}$
   $=\frac{\square}{5}$

2. $\frac{6p}{7}-\frac{p}{7}$
   $=\frac{6p-\square}{7}$
   $=\frac{\square}{\square}$

3. $\frac{3x}{8}-\frac{2x}{8}$
   $=\frac{\square-2x}{\square}$
   $=\frac{\square}{\square}$

4. $\frac{2p}{4}-\frac{p}{4}$
   $=\frac{\square-\square}{\square}$
   $=\frac{p}{\square}$

5. $=\frac{a}{2}+\frac{a}{3}$
   $=\frac{3a+\square}{6}$ ( 2,3 இன் பொது மடங்குகளுள் சிறியதை காண்பதன் மூலம் )
   $=\frac{\square}{\square}$

6. $\frac{2p}{3}+\frac{p}{6}$

$=\frac{4\square+p}{6}$ ( 3,6 இன் பொது மடங்குகளுள் சிறியதை காண்பதன் மூலம் )

$=\frac{\square}{\square}$

7. $\frac{2a}{3}+\frac{a}{4}$

$=\frac{8a+\square}{\square}$ ( 3,4 இன் பொது மடங்குகளுள் சிறியதை காண்பதன் மூலம் )

$=\frac{11a}{\square}$

8. $\frac{2x}{3}-\frac{x}{4}$

$=\frac{\square-3x}{12}$

$=\frac{\square}{\square}$

9. $\frac{x}{6}+\frac{2x}{9}$

$=\frac{3x+\square}{18}$

$=\frac{\square}{\square}$

10. $\frac{2x}{4}-\frac{x}{5}$

$=\frac{\square-4x}{\square}$

$=\frac{6x}{\square}$

11. $\frac{5p}{9}-\frac{p}{4}$

$=\frac{20p-\square}{\square}$

$=\frac{\square}{\square}$

12. $\frac{a+1}{5}+\frac{2a+3}{5}$

$=\frac{a+1+\square+\square}{5}$

$=\frac{\square+\square}{5}$

13. $\frac{x+1}{3}+\frac{x+3}{6}$

$=\frac{2(\square+1)+(\square+\square)}{6}$

$=\frac{\square+2+x+\square}{6}$

$=\frac{\square+\square}{6}$

## 4.3 பகுதியில் அட்சரங்களை கொண்ட அட்சரகணித பின்னங்களின் கூட்டலும் கழித்தலும்

**உதாரணம் : 1**

1. $\frac{5}{x}+\frac{2}{x}$

$=\frac{5+2}{x}$

$=\frac{7}{x}$

2. $\frac{2}{3x}+\frac{5}{x}$

$=\frac{2+15}{3x}$ ( $3x, x$ இன் பொது மடங்குகளுள் சிறியதை காண்பதன் மூலம் )

$=\frac{17}{3x}$

3. $\frac{1}{x}-\frac{1}{2x}$

$=\frac{2}{2x}-\frac{1}{2x}$

$=\frac{2-1}{2x}$ ( $2x, x$ இன் பொது மடங்குகளுள் சிறியதை காண்பதன் மூலம் )

$=\frac{1}{2x}$

**பயிற்சி 4.3**

1. கீழே தரப்பட்டுள்ள அட்சரகணித பின்னங்களைச் சுருக்குக

(i) $\frac{2}{a}+\frac{5}{a}$ (ii) $\frac{3}{p}+\frac{2}{p}$ (iii) $\frac{5}{x}+\frac{1}{x}$ (iv) $\frac{4}{3a}+\frac{2}{a}$ (v) $\frac{3}{2p}-\frac{1}{p}$

(vi) $\frac{3}{2p^2}+\frac{1}{3p}$ (vii) $\frac{4}{5x}+\frac{2}{x}$ (viii) $\frac{4}{5x}-\frac{1}{2x}$ (ix) $\frac{2}{3x}+\frac{1}{4x^2}$ (x) $\frac{5}{12x}-\frac{1}{5x}$

(xi) $\frac{2x}{y}+\frac{1}{2y}$

## 4.4 அட்சரகணித பின்னங்களின் பெருக்கல்

இரு அட்சரகணித பின்னங்களை பெருக்கும் போது பகுதியானது பகுதியுடன் பெருக்கப்பட்டு பகுதியாகவும், தொகுதியானது தொகுதியுடன் பெருக்கப்பட்டு தொகுதியாகவும் எழுதப்படும்.

**உதாரணம்**

1. $\frac{2}{5}\times\frac{3}{7}$

$=\frac{2\times 3}{5\times 7}$

$=\frac{6}{35}$

2. $\frac{a}{b}\times\frac{c}{d}$

$=\frac{a\times c}{b\times d}$

$=\frac{ac}{bd}$

அட்சரகணித பின்னமொன்றை முழு எண்ணால் பெருக்கும்போது பின்னங்களை பெருக்குவது போன்று தொகுதி எண் மட்டும் முழு எண்ணால் பெருக்கப்படும்.

**உதாரணம்**

1. $\frac{a}{b}\times 3=\frac{3a}{b}$

   $3\times\frac{a}{b}=\frac{3a}{b}$

2. $\frac{4a}{3}\times\frac{9}{2a}$ (பொது காரணிகளால் வகுக்கும் போது)

   $=\frac{{}^{2}\cancel{4}\cancel{a}}{\cancel{3}}\times\frac{\cancel{9}^{3}}{\cancel{2}\cancel{a}}$

   $=\frac{2\times 3}{1}$

   $=6$

3. $\frac{a^2}{14y^2}\times\frac{2y^2}{a}$

   $=\frac{a^{\cancel{2}}}{{}^{7}\cancel{14}\,\cancel{y^2}}\times\frac{\cancel{2}\,\cancel{y^2}}{\cancel{a}}$

   $=\frac{a\times 1}{7\times 1}$

   $=\frac{a}{7}$

**பயிற்சி 4.4**

1. தொகுதி A யில் உள்ள பின்னங்களின் பெருக்கத்துக்குப் பொருத்தமான விடையை தொகுதி B யுடன் தொடர்புபடுத்துக

| | A | B |
|---|---|---|
| (i) | $\frac{1}{x}\times\frac{1}{y}$ | $\frac{x}{y}$ |
| (ii) | $\frac{2}{5}\times\frac{1}{3}$ | $\frac{1}{3}$ |
| (iii) | $\frac{a}{b}\times\frac{1}{x}$ | $\frac{1}{7}$ |
| (iv) | $\frac{2}{7}\times\frac{1}{2}$ | $\frac{1}{xy}$ |
| (v) | $\frac{1}{x}\times\frac{x}{3}$ | $\frac{2}{15}$ |
| (vi) | $\frac{2}{y}\times\frac{x}{2}$ | $\frac{a}{bx}$ |
| (vii) | $\frac{5p^2}{2q}\times\frac{4q}{p}$ | $10p$ |

2. (a) $\frac{1}{3}\times\frac{3}{7}$ (b) $\frac{x}{3}\times\frac{3}{7x}$ (c) $\frac{1}{14}\times\frac{1}{2}$ (d) $\frac{a}{y}\times\frac{y}{14}$

மேலே உள்ள (a), (b), (c), (d) ஆகியவற்றில் எவற்றின் பெருக்கம் $\frac{1}{7}$ ஆக அமையும்.

(i) a யும் d யும் மட்டும்
(ii) a யும் b யும் மட்டும்
(iii) c மட்டும்
(iv) a யும் b யும் d யும் மட்டும்

3. கீழே தரப்பட்டுள்ள அட்சரகணித பின்னங்கள் பெருக்குவதற்கு வெற்றுக்கூடுகளை நிரப்புங்கள்.

(i) $\frac{b}{4a^2}\times\frac{2}{b^2}$

$=\frac{b}{4a^2}\times\frac{2}{b^2}$ (பகுதி, தொகுதிகளை பொதுக்காரணியால் வகுக்க)

$=\frac{\square\times\square}{\square\times\square}$

$=\frac{\square}{\square}$

(ii) $\frac{3p}{4q^2}\times\frac{pq^2}{3}$

$=\frac{3p}{4q^2}\times\frac{pq^2}{3}$ (பகுதி, தொகுதிகளை பொதுக்காரணியால் வகுக்க)

$=\frac{\square\times\square}{\square\times\square}$

$=\frac{\square}{\square}$

4. கீழே தரப்பட்டுள்ள பின்னங்களைப் பெருக்குக.

(i) $\frac{11}{9}\times\frac{18}{5}$ (ii) $\frac{z}{3}\times\frac{z}{2}$ (iii) $\frac{9}{4}\times\frac{6b}{5}$ (iv) $\frac{2c}{5}\times\frac{10}{3c}$ (v) $\frac{4z}{3}\times\frac{9}{2z}$

(vi) $\frac{p}{3}\times\frac{q}{p}$ (vii) $\frac{5x}{2}\times\frac{x}{10}$ (viii) $\frac{y^2}{6}\times\frac{y}{4}$ (ix) $\frac{7}{y}\times\frac{2y^2}{14}$ (x) $\frac{r^2}{4}\times\frac{6}{r}$

(xi) $\frac{4y^2}{3}\times\frac{15z}{8y}$ (xii) $\frac{3a^2}{4y}\times\frac{y^2}{6a}$ (xiii) $\frac{10a}{7}\times\frac{14}{5ab}$ (xiv) $\frac{pq}{13}\times\frac{3q}{p^2q}$ (xv) $\frac{6bc}{5}\times\frac{b}{9c}$

## 4.5 அட்சரகணித பின்னங்களின் நிகர்மாறு

> அட்சரகணித பின்னம் ஒன்றின் பகுதி தொகுதியாகவும், தொகுதி பகுதியாகவும் மாற்றி எழுதும்போது கிடைக்கும் அட்சரகணித பின்னமானது முன்னைய அட்சரகணிதப் பின்னத்தின் நிகர்மாறு பின்னமாகும்.
>
> $\frac{a}{b}$ இன் நிகர்மாறு $\frac{b}{a}$ ஆகும்

**பயிற்சி 4.5**

1. பொருந்தும் வகையில் A யுடன் B யை தொடர்புபடுத்துக

| அட்சரக்கணித பின்னம் B | நிகர்மாற்று பின்னம் A |
|---|---|
| $\frac{1}{y}$ | $\frac{3y}{2x}$ |
| $\frac{a}{b}$ | $\frac{5y}{6}$ |
| $\frac{x}{3}$ | $\frac{3}{x}$ |
| $\frac{6}{5y}$ | $\frac{b}{a}$ |
| $\frac{2x}{3y}$ | $y$ |

2. வெற்றிடங்களை நிரப்புக

(a) $\frac{p^2}{q}$ இன் நிகர்மாறு .......................... ஆகும்.

(b) $\frac{\square}{\square}$ இன் நிகர்மாறு $\frac{y}{3x^2}$ ஆகும்.

(c) $\frac{1}{x^2}$ இன் நிகர்மாறு .......................... ஆகும்.

(d) $\frac{a^2}{25b}$ இன் நிகர்மாறு .......................... ஆகும்.

(e) $\frac{\square}{\square}$ இன் நிகர்மாறு $\frac{2a}{3x^2}$ ஆகும்.

## 4.6 அட்சரகணித பின்னங்களின் வகுத்தல்

பின்னங்களை வகுப்பது போன்று அட்சரகணித பின்னங்களை வகுக்கும்போது வகுபடும் பின்னத்தை வகுக்கும் பின்னத்தின் நிகர்மாறால் பெருக்க வேண்டும்

1. $\frac{1}{2}\div 3$

$=\frac{1}{2}\times\frac{1}{3}$

$=\frac{1}{6}$

2. $\frac{1}{2}\div\frac{1}{5}$

$=\frac{1}{2}\times\frac{5}{1}$

$=\frac{5}{2}$

3. $\frac{x}{2}\div 3$

$=\frac{x}{2}\times\frac{1}{3}$

$=\frac{x}{6}$

4. $\frac{x}{2}\div\frac{x}{5}$

$=\frac{x}{2}\times\frac{5}{x}$ (நிகர்மாறினை பெருக்குதல் பொதுக்காரணியால் வகுத்தல்)

$=\frac{5}{2}$

5. $x\div\frac{x}{2}$

$=x\times\frac{2}{x}$ (நிகர்மாறினால் பெருக்குதல்)

$=2$

6. $\frac{3p^2}{5q}\div\frac{9p}{10q}$

$=\frac{3p^2}{5q}\times\frac{10q}{9p}$

$=\frac{p\times 2}{1\times 3}$

$=\frac{2p}{3}$

**பயிற்சி 4.6**

1. கீழே தரப்பட்டுள்ள அட்சரகணித பின்னங்களை வகுப்பதற்கு வெற்றுகூடுகளை நிரப்புக

(i) $\frac{1}{x} \div \frac{1}{y}$

$= \frac{1}{x} \times \frac{\square}{1}$

$= \frac{\square}{\square}$

